திருவள்ளூர் மாவட்டம் ஆரணி மற்றும் கிளாம்பாக்கம் பகுதியில்

# 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய துணை வேளாண் விரிவாக்க மைய கட்டடம்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திறந்து வைத்தார்!

திருவள்ளூர் ஜன 25:

திருவள்ளூர் மாவட்டம் வேளாண் விற்பனை வாரியத்தால் சோழவரம் வட்டாரம் ஆரணி மற்றும் திருவள்ளூர் வட்டாரம் கிளாம்பாக்கம் தலா ரூ.1 கோடி ருபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய துணை வேளாண் விரிவாக்க மைய கட்டடம் திறப்பு விழா நடைபெற்றது இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.கிருஷ்ணசாமி டி.ஜே.கோவிந்தராஜன் துரை சந்திரசேகர் ஆகியோர் முன்னிலையில் வகித்தார்கள் இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு புதிய கட்டிடத்தை திறந்து வைத்தார் .

இதனை தொடர்ந்து கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 1 விவசாயிக்கு ரூ.8172 மதிப்பீட்டில் விசைத்தெளிப்பானும், 1 விவசாயிக்கு ரூ.4648 மதிப்பீட்டில் பேட்டரி தெளிப்பானும், 1 விவசாயிக்கு ரூ.520 மதிப்பீட்டில் வரப்புகளில் பயிர் சாகுபடியும்,1 விவசாயிக்கு கொய்யா செடிகளும், 1 விவசாயிக்கு தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ .295 மதிப்பீட்டில் நுண்ணூட்டக் கலவையும், 4 விவசாயிக்கு மாநில வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.3153 மதிப்பீட்டில் துத்தநாக சல்பேட், எள், கேழ்வரகு, பச்சை பயிர் தொகுப்பு, 3 விவசாயிக்கு முதலமைச்சரின் மன்னுயிர் காத்து மண்ணீரல் காப்போம் திட்டத்தின் கீழ் ரூ.6450 மதிப்பீட்டில் மண்புழு உர படுக்கை திரவ உயிர் உரமும், தோட்டக்கலைத் துறை சார்பில் ஒரு விவசாயிக்கு மாநில தோட்டக்கலை வளர்ச்சி திட்டத்தின் கீழ் (2024-25) ரூ.710000 மதிப்பில் நிழல் வலைக்குடி அமைத்தலுக்கும், 5 விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு பூச்சி நோய் விழிப்புணர்வு வழிகாட்டியும் என மொத்தம் 19 விவசாயிகளுக்கு ரூ.7,33,238 மதிப்பீட்டில் வேளாண் உபகரணங்களை அமைச்சர் வழங்கினார்

நிகழ்ச்சியில் அமைச்சர் பேசுகையில் திருவள்ளூர் மாவட்டம் சோழவரம் வட்டாரத்திற்கு உட்பட்ட துணை வேளாண் விரிவாக்கம் மையம் சோழவரம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் வேளாண்மை துறையின் கட்டுப்பாட்டில் உள்ள இயங்கி வந்தது. தற்பொழுது விவசாயிகள் பயன்பெறும் வகையில் வேளாண் இடுப்பொருட்களான விதைகள் உரங்கள் நுண்ணூட்டக் கழிவுகள் மற்றும் வேளாண் பண்ணை கருவிகள் முதலியவை விவசாய பெருமக்களுக்கு தேவையான அளவில் பாதுகாப்பாக வழங்கிடும் வகையிலும், இருப்பு வைத்திடவும் மேலும் வேளாண் இடு பொருட்களை உரிய நேரத்தில் பெறுவதற்கும் பயிர் சாகுபடிக்கு தேவையான புதிய தொழில் நுட்பங்களை உடனுக்குடன் எவ்வித தொய்வும் சிரமமுமின்றி பெறுவதற்கும் மிகவும் வசதியாக இருக்கும் வகையில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய துணை வேளான் விரிவாக்கம் மையம் புதிய கட்டிடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சுற்றுவட்டாரத்தில் உள்ள 23 வருவாய் கிராமங்களில் வேளாண்மை மற்றும் தோட்டக் கலை பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வரும் விவசாயிகள் பயன்பெறுவார்கள். மேலும் இதே போலவே திருவள்ளூர் வட்டாரம் கிளாம்பாகத்தில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் துணை வேளாண் விரிவாக்கம் மையம் ரூ. 50 இலட்சம் கட்டப்பட்டுள்ளது அதையும் இன்றைய தினம் திறந்து வைக்கப்படுகிறது ஆகவே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனவான இருபோக சாகுபடி நிலங்களை அதிகரித்து உணவு தானிய உற்பத்தியை பெருக்கி விவசாயிகள் வருமானத்தை அதிகரிப்பதற்கும் எப்பொழுதும் நமது தமிழ்நாடு அரசு மற்றும் மாவட்ட நிர்வாகம் உறுதுணையாக இருக்கும் என அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தெரிவித்தார் இந்நிகழ்வில் வேளாண்மை இணை இயக்குனர் கலாதேவி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் வேளாண்மை மோகன், வேளாண் உதவி இயக்குநர்கள் ரமேஷ் , ஸ்ரீ சங்கரி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், பி.ஜெ.மூர்த்தி, மாநில மாணவர் அணி இணை செயலாளர் சி.ஜெரால்டு, அவை தலைவர் மு.பகலவன், ஆரணி நகர செயலாளர் முத்து, திருவள்ளூர் மேற்கு ஒன்றிய செயலாளர் ஆர். ஜெயசீலன், பொதுகுழு உறுப்பினர் த.எத்திராஜ், ஜி.விமல் வர்ஷன், கண்ணதாசன், வெங்கடேசன், வி.தியாகராஜன், ஒன்றிய செயலாளர் செல்வசேகரன், கே.வி. லோகேஷ், வி.தியாகராஜன், ஒன்றிய நிர்வாகிகள் கே.கே.சொக்கலிங்கம், தரணி, டி.எம்.ராமசந்திரன், சாமுண்டீஸ்வரி, சண்முகம், எஸ். சௌந்தரராஜன், ஸ்ரீதர், ஜனா, தினேஷ், சரன் சுரி, ஆர்.பிரபு, மற்றும் விவசாய பெருமக்கள் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தலைமையில் நேற்று (24.1.2025) சென்னை தமிழ்நாடு மின்சார வாரிய தலைமையகத்தில், எதிர்வரும் கோடை காலத்தில் தமிழ்நாடு முழுவதும் தடையில்லா சீரான மின் விநியோகம் வழங்குவதற்கு தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் சார்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அனைத்து மண்டல தலைமை பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வைப் பொறியாளர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் க. நந்தகுமார், இணை மேலாண்மை இயக்குநர் (நிதி) விஷ மஹாஜன், மின்தொடரமைப்பு கழக மேலாண்மை இயக்குநர் கே.இந்திராணி, இயக்குநர் (பகிர்மானம்) அ.ரா.மாஸ்கர்னஸ், மின் பகிரமானக் கழக இயக்குநர் (நிதி) கே. மலர்விழி மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞரணி அணி சார்பில் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்துகொண்டு புதிதாக பொறுப்பேற்றுள்ள அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்களுக்கு கழக பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனைகள் கூறி கை கடிகாரம் வழங்கினார். உடன் சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் பிரபு கஜேந்திரன், அப்துல்மாலிக், கோவி.லெனின், இளமாறன், மேயர் ஜி.உதயகுமார், சி.ஜெரால்டு, மா.ராஜ், வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், பா.நரேஷ் குமார், த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், ஜி.விமல்வர்ஷன், வி.குமார், ஜெ.மகாதேவன், சன்.பிரகாஷ், ஜி.நாராயண பிரசாத், பேபிசேகர், பொன்.விஜயன், டி.தேசிங்கு, என்.இ.கே.மூர்த்தி , தி.வை.இரவி, புஜ்ஜி டி.ராமகிருஷ்ணன், ஆர்.ஜெயசீலன், ப.ச.கமலேஷ், ஜி.ஆர்.திருமலை ,சே.பிரேம் ஆனந்த், தி.வே.முனுசாமி, தங்கம் முரளி, இளைஞர் அணி நிர்வாகிகள் ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, வி.ஜெ.உமா மகேஸ்வரன், அக்னி ராஜேஷ், டி.பிரியாகுமார், ஜி.துர்கா பிரசாத் உள்பட மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக இளைஞரணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளனர்.

மதுரவாயலில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் !

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றுகிறார்!

## மாவட்ட அமைப்பாளர் பா.அருண்குமார் வேண்டுகோள்!

சென்னை,ஜன.25-

கழக இளைஞர் அணி செயலாளரும் தமிழ் நாட்டின் துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (25.01.2025) சனிக்கிழமை மாலை 4 மணியளவில் ஜெயின் திடலில், (போரூர்) சென்னை தெற்கு மாவட்டச் செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் வீர வணக்க நாள் உரை நிகழ்த்த உள்ளதால்

சென்னை தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாணவர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், ஒன்றிய அமைப்பாளர்கள், ஒன்றிய துணை அமைப்பாளர்கள், தமிழ் மாணவர் மன்ற தோழர்கள் மற்றும் மாணவர்கள் பெருந்திரளாக பங்கேற்று தீந்தமிழ் மொழி காக்க தங்கள் தேக்குமரத் தேகத்தை தீயின் நாக்குகளுக்கு இரையாக்கிய அத்தகைய வீரர்களின் நினைவுகளைப் போற்றுவதுடன் அடுத்து வரும் இளைய சமுதாயத்தினற்கும் கொண்டு சேர்க்கும் வகையில் கழகத்தின் சார்பில் நடைபெறும் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு மிகவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பா. அருண்குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ரூ.4276.44 கோடி மதிப்பீட்டில் பேரூரில் அமைக்கப்பட்டு வரும்

# கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தின் கட்டுமானப் பணிகள்!

## இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய் பார்வையிட்டு ஆய்வு செய்தார்!

சென்னை,ஜன.25-

சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் 4 ஆயிரத்து 276 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பேரூரில் அமைக்கப்பட்டு வரும் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் நிலையத்தின் கட்டுமான பணிகளை சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், நேற்று (24.01.2025) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக் குட்பட்ட பகுதிகளுக்கான குடிநீர், பூண்டி, சோழவரம், புழலேரி, கண்ணன்கோட்டை தேர்வாய்கண்டிகை, செம்பரம்பாக்கம், வீராணம் ஆகிய ஏரிகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. சென்னை மாநகரின் நீண்ட கால குடிநீர்த் தேவை மற்றும் மக்களின் அன்றாட குடிநீர் தேவையைக் கருத்தில் கொண்டு, சென்னை குடிநீர் வாரியம் பல்வேறு நடிவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

சென்னையின் வளர்ச்சிக்கேற்ப குடிநீர் ஆதாரங்களை மேம்படுத்துவதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 21.08.2023 அன்று சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) நிதியுதவியுடன் செங்கல்பட்டு மாவட்டம், கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள பேரூரில் 4 ஆயிரத்து 276 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

அதன் அடிப்படையில் இந்நிலையத்தின் கட்டுமான பணிகள் தற்போது முழுவீச்சில் நடைப்பெற்று வருகிறது. கடல்நீரை உட்கொணரும் குழாய்கள் மற்றும் உவர் நீரை வெளியேற்றும் குழாய்கள் பதிக்கும் பணிக்கான முன்னேற்பாடு பணிகள் நடைப்பெற்று வருகின்றன. கடல் நீரை உட்கொள்ளும் தொட்டி மற்றும் நீரேற்று நிலைய (Intake and Pumping Station) கட்டுமான பணிகள் நடைப்பெற்று வருகிறது.

செதிலடுக்கு வடிகட்டி (Lamella Clarifier), சவ்வூடு வெளியேற்றும் தெளிந்த நீர் தொட்டி (RO Permeate Tank), கற்றழுத்தம் மூலம் எண்ணெய் மற்றும் கசடுகளை நீக்கும் தொட்டி (Dissolved Air Flotation), இரட்டை மணல் வடிகட்டி அலகுகள் (Gravity Dual Media Filter), எதிர் மறை சவ்வூடுபரவல் கட்டிடம் (RO Building), சவ்வூடு வெளியேற்றம் தெளிந்த நீர் தொட்டி (RO Permeate Tank), கசடுகளை கெட்டிப்படுத்தும் தொட்டி (Sludge Thickener), அடிதள பணிகள் நடைப்பெற்று வருகிறது.

சுத்திகரிக்கப்பட்ட நீர் சேகரிப்பு தொட்டி (Clear water reservoir), நீர் சேகரிப்பு தொட்டி (Product water tank), நிர்வாகக் கட்டிடம் (Admin Building), சேமிப்பு கிடங்கு (Warehouse) மற்றும் தொழிற்கூட கட்டிடங்களுக்கான (Workshop) மேல் கட்டமைப்பு பணிகள் நடைப்பெற்று வருகிறது.

இந்நிலையத்தில், கடல்நீரை குடிநீராக்க 1150 மீட்டர் நீளத்திற்கு கடலுக்குள் HDPE குழாய்கள் பதிக்கப்படும். மேலும், இந்நிலையத்தில் அமைக்கப்படும் நீர் கரைந்த காற்று அலகுகள் (Dissolved Air Floatation) மற்றும் இரட்டை ஈர்ப்பு மணல் வடிகட்டி அலகுகள் (Gravity Dual Media Filter) மற்ற வழக்கமான நிலையங்களை விட நவீன முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த அலகுகள் மூலம் கடலில் உள்ள கசடுகள் (மிதப்பவை, துகள்கள்) தற்போதுள்ள நிலையிலும், அதன் பிறகு கடல் நீரை குடிநீராக்கும் திறனை நிலையாகப் பெறும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், இதற்காக, இந்நிலையத்திலிருந்து போரூர் வரை 59 கி.மீ நீளத்திற்கு குடிநீர் குழாய் பதிக்கப் படும்.

இந்த திட்டத்தின் மூலம், பெருநகர சென்னை மாநகராட்சிக் குட்பட்ட பகுதிகள், தாம்பரம் மாநகராட்சிக் குட்பட்ட பகுதிகள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அருகாமையில் உள்ள 20 ஊராட்சிப் பகுதிகளில் உள்ள 22.67 இலட்சம் மக்கள் பயன் அடைவார்கள்.

இவ்வாய்வின் போது, தலைமை பொறியாளர் திருமதி.ஜ.சுகந்தி, மேற்பார்வை பொறியாளர், திருமதி. இ.சாந்தி, ஆகியோர் உடன் இருந்தனர்.


